முருகப்பெருமான் துணை

**மகான் ரோமரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

02.11.2021, செவ்வாய்கிழமை

1. கலியுகம் தேற்றம் காணவேண்டி
கந்தவேலன் அவதாரமாக வந்து
அழியாமை தந்தருளும் தவசியே
அரங்கனே உன்பெருமை கூறி
2. கூறியே பிலவ துலையின் திங்கள்
குறையிலா மூவையோர் திகதி குசன் வாரம்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் 16ம் நாள், 02.11.2021 செவ்வாய்கிழமை)
தெரிவிப்பேன் ரோமரிஷி யானும்
துல்லிய ஆசிதனை உரைப்பேன்
3. உரைக்கவே ஓங்கார ஞான உலகம்
உயர்ஞானி அரங்கன் வழிகாட்டலால்
குறைவின்றி மாற்றம் காணக்கூடும்
குறிப்பாக ஓங்கார குடிலுக்கு வந்து
4. வந்துமே முழுமதி பூஜை கலந்து
வல்லமை தரும் அரங்கன் உபதேசத்தை
சிந்தை ஏற்றி உலக மக்கள்
சித்தியருள வேண்டி வருக
5. வருகவே மக்களுக்கு வரங்களும்
வந்தடையும் ஞான தேசிகன் வழி
முருகா எனும் செபதபங்கள்
முழுமைபட உலகம் எங்கும் முழங்க
6. முழங்கவே முழுமையான மாற்றம்
முழுமதி வளர்ச்சி போலே கண்டு
களங்கமற கலியுகம் தானும்
கருணை கொண்ட ஞானவான்கள் மிகுதியாகி
7. ஆகியே எங்கும் உலகமாற்றம்
ஆற்றல்மிக்க இவர்கள் மூலமாகவே
அகிலத்தில் ஞான ஆட்சி காலமாக
அமைந்துமே வளர்ச்சி காண்கும்
8. காண்கவே தர்ம வேலி என்கின்ற
கட்டாய பாதுகாப்பு தானும்
ஆன்மீக வழியாகப் பரவி
அரங்கன் தலைமையில் மாற்றங்கள்

9. மாற்றங்கள் சுத்த நெறிவாழ்வாக
மக்களிடை தயவு நெறி தேறி
ஆற்றல்பட வாழ்வாதாரம் சிறந்து
அருளுவேன் கலியுக மக்களெல்லாம்

10. மக்களெல்லாம் அமைதி பாதுகாப்பு
மரணம் வெல்லும் சக்தியும் கண்டு
தேக்கமின்றி ஞான தேசிகன் அருளில்
தெயவீக ஞானிகளாகி சிறப்பர்

11. சிறப்புதரும் கலியுகத்தின் ஞானி
சித்திதரும் பிரம்மத்தின் ஞானி
அறம்போற்றும் அரங்கனால் கலியுகம்
ஆபத்தில்லா ஞான யுகமாக மாற்றம் பெறும்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–